**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 2/2010**

Prosecution witness: **59**

| | | | |
|---|---|---|---|
| Name: | சிக்கந்தர் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1,A11, A15 present. Others absent. Petition U/s 317 filed and allowed.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 13.06.2023**

**முதல் விசாரணை**:

நான் தென்காசி மாவட்டம் அரிப்புக்காரத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தென்காசி, எல்.ஆர்.எஸ்பாளையம், கூலக்கடை பஜாரில் பலசரக்குகடை வைத்து நடத்தி வருகிறேன். தற்போது ஆந்திராவில் கடை நடத்தி வருகிறேன். தென்காசியில் சுமார் 6 வருடங்கள் கடை நடத்தினேன் எதிரிகளை தெரியாது. சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் ஒரு நாள் காலை 6.00 மணிக்கு கடையை திறந்து வைத்திருந்தேன். மதியம் சுமார் 12.00 மணியளவில் பிரச்சனை என்று சொன்னார்கள். நான் கடையை அடைத்து சென்றுவிட்டேன். என்னை போலீசார் விசாரித்தார்கள். ஹனிபா குரூப்பிற்கும் குமார் பாண்டியன் குரூப்பிற்கும் பிரச்சனை என்று கேள்விப்பட்டேன். அதனால் சுமார் 4-5 நபர்கள் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன்.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார்கள் என்னை விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி அன்று காலை 10.15 மணிக்கு நான் கடையில் வியாபாரத்தை கவனித்துக்கொண்டிருந்தபோது கூலக்கடை பஜார் விலக்கில் இரண்டு பார்ட்டிகளும் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டார்கள் என்றும் பெரிய அருவாள், கத்தி , இரும்புகம்பி இவைகளை வைத்து தாக்கி கொண்டிருந்தார்கள் என்றும் அவர்கள் யார் என்று தெரியவில்லை என்றும் சம்பவத்தில் சிலர் அரிவாள் வெட்டுப்பட்டும் அதில் இரண்டுபக்கமும் மூன்று மூன்று பேர்கள் இறந்துவிட்டார்கள் என்றும் சம்பவ நேரம் அந்த வழியாக வந்த மக்கள் பீதியில் பயந்து ஓடினார்கள் என்றும் எல்லோரும் பயத்தில் கடைகளை அடைத்துவிட்டு சென்றார்கள் அதனால் நானும் கடையை அடைத்துவிட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும் கூறியிருக்கிறேன் என்றும் சொன்னால் சரிதான்.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

நான் எல்ஆர்எஸ்பாளையத்தில் எம்.ஐ.ஜி ஸ்டோர் என்று கடை வைத்திருந்தேன். நான் வியாபாரம் செய்துவந்தேன் என்பதற்கு நகராட்சி வழங்கிய சான்று எதுவும் இல்லை. அது என் சொந்த இடம் தான். அதை விற்றுவிட்டேன். நான் கூறுவதுபோல் எல்ஆர்எஸ்பாளையில் கடை நடத்தி வந்ததாக கூறுவது பொய் என்றால்ச ரியல்ல. நான் 14.08.2007 ம் தேதி சம்பவ இடத்திலேயே இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் பல ஆண்டுகளாக தென்காசியிலேயே இல்லை என்றும் போலீசார்

கேட்டுக்கொண்டதன் பேரில் 14.08.2007 ம் தேதி எல்ஆர்எஸ்பாளையத்தில் கடை நடத்தி வந்தாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.